2012 மே 7]

கொடுப்பாரேயானால், உரிய நடவடிக்கையை வருவாய்த் துறை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 215, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

215—

மின் நிலையப் பணிகள்

***99—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியில் கூடுதுறை மலை மற்றும் கரட்டுமேடு ஆகிய பகுதிகளில் 5 மெகா வாட் திறன் கொண்ட மின் நிலையப் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம். பவானி குறுக்கணை-1 புனல் மின் திட்டப் பணிகள், ஏறத்தாழ 89 விழுக்காடு முடிவடைந்திருக்கின்றன. இத்திட்டத்தினால், டிசம்பர் 2012-க்குள் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

பவானி குறுக்கணை-2 புனல் மின் திட்டப் பணிகள், 96 விழுக்காடு முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தினால் ஆகஸ்டு 2012—இல் மின் உற்பத்தியைத் துவக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட பவானி ஆற்றின் குறுக்கே 2 தடுப்பணைகளைக் கட்டி, அதிலே மின் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே 145 கோடி ரூபாயிலே 2 திட்டங்கள் போடப்பட்டன. திட்டங்கள் போடப்பட்டதற்குப் பின்னாலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு அதைக் கிடப்பிலே போட்டு விட்டது. ஆனால், இன்று 3–ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தை 1½ ஆண்டுக் காலத்திலே, மின்சாரத்திலே மிதமிஞ்சிய மாநிலமாக உருவாக்குவோம் என்று சொல்லி, இப்போது எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சியை வேகப்படுத்துகின்ற வகையிலே நமது திட்டத்தை இன்று முழுமையாக முடிக்கிற நிலையை எட்டி இருப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், மனித நேயம் கொண்ட அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு வருகிற டிசம்பர் மாதத்திற்குள்ளாக இந்தத் திட்டத்தை முடித்துத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்குத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 216, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

216—

பாதாள சாக்கடைத் திட்டம்

***6291—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?